**வறுமையின் பல்வேறு கோணங்களைக் கூர்ந்தாய்வதற்கான ஊடக கூட்டிணைவு நிகழ்ச்சித்திட்டம்**

வறுமை தொடர்பான விடயங்களுடன் செயற்படுகின்ற ஆய்வு நிலையமான வறுமை ஆராய்ச்சி நிலையம் இலங்கையின் வறுமை சார் வித்தியாசமான விடயங்களை ஆராயும் நோக்குடன் அச்சு, வானலை (தொலைக்காட்சி/ வானொலி) மற்றும் இணையத்தள ஊடக நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்றுகின்ற அனைத்து ஊடகவியலாளர்களிடமிருந்தும் (தனிப்பட்ட ரீதியில் செயற்படுவோர் உட்பட) ஒரு ஊடக கூட்டிணைவு நிகழ்ச்சித் திட்டத்திற்காக விண்ணப்பங்களைக் கோருகின்றது.

இக்கூட்டிணைவு நிகழ்ச்சிக்கு போட்டியிட்டு தெரிவுசெய்யப்பட்ட பதினைந்து (15) ஊடகவியலாளர்களுக்கு வறுமையினது பல்வேறு பரிமாணங்கள் மீதான சிறந்த புரிந்துணர்வினை வழங்கி மற்றும் வெளிப்படுத்தப்படாத அல்லது மிகவும் குறைவாக அறிக்கைப்படுத்தப்படுகின்ற வறுமை தொடர்பான விடயங்களில் வழிகாட்டல்களை வழங்குவதனூடாக அவர்களது திறன்களை விருத்தி செய்வதற்காக முன்னெடுக்கப்பட்டுள்ளது.

வெற்றிபெற்ற பங்கேற்பாளர்கள் சிரேஷ்ட ஊடகவியலாளர்கள் மற்றும் அபிவிருத்தி ஆய்வாளர்களுடன் நேருக்கு நேர் சந்திக்கும் வாய்ப்பினைப் பெறுவதுடன் அவர்களது களப் பயணச் செலவினங்களுக்காக பண உதவியையும் பெற்றுக் கொள்வர். அவர்கள் தமக்கு விருப்பமான ஒரு விடயத்தினை ஆழ, அகலமாக ஆராய்வதற்குரிய வாய்ப்பினைப் பெறுகின்றனர் என்பதுடன் இவ்வாய்ப்பு தாம் ஆராயும் விடயம் தமது உரிய ஊடகத்தினூடாக வெளிப்படுத்தப்பட வேண்டும் எனும் புரிந்துணர்வின் அடிப்படையிலானதாகும்.

விண்ணப்பங்கள் செய்தி நிருபர்கள், தனிச்சிறப்புக் கருத்துக்கள் எழுதுவோர், ஒலி/ஒளி அலைபரப்புத் தயாரிப்பாளர்கள் மற்றும் 'ஒன்லைன்' உள்ளடக்க படைப்பாளர்களிடமிருந்து ஏற்றுக்கொள்ளப்படும்.

பங்கேற்பாளர்களைத் தெரிவுசெய்கையில் நிகழ்ச்சித் திட்டத்தில் ஒரு சிறந்த பால் சமநிலை பேணப்படும் என்பதுடன் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பணியாற்றும் ஊடகவியலாளர்களை பிரதிநிதித்துவப்படுத்துவதாக அமையும்.

விண்ணப்பாதாரிகள் முழு நேரமாகவோ, பகுதி நேரமாகவோ அல்லது தனிப்பட்ட ரீதியில் இயங்குபவர்களாகவோ குறைந்தது ஐந்து (5) வருட ஊடகச் சேவை அனுபவத்தினை கொண்டுள்ள ஊடகவியலாளராக அல்லது புகைப்பட ஊடகவியலாளராக இருத்தல் வேண்டும்.

அனைத்து விண்ணப்பதாரிகளும் இந்நிகழ்ச்சித் திட்டத்திலிருந்து பெறப்படும் தமது கண்டாய்வினை பிரசுரிப்பதற்கு அல்லது ஒலி/ஒளி அலைபரப்புவதற்கு உடன்படுவதாக தாம் இணைந்து பணியாற்றுகின்ற ஊடக நிறுவனத்தின் பதிப்பாசிரியர் அல்லது தொகுப்பாளரிடமிருந்து கடிதமொன்றினை வழங்குதல் வேண்டும்.

பங்கேற்பாளர்கள் அச்சு, வானலை மற்றும் இணையத்தள ஊடகங்களில் சிறந்த அனுபவம் கொண்ட ஐந்து ஊடக நிபுணர்களைக் கொண்ட குழாமொன்றினால் தெரிவுசெய்யப்படுவதுடன்

இவர்களால் இந்நிகழ்ச்சித்திட்டம் முழுதும் வழிகாட்டப்பட்டு பயிற்றப்படுவர். வறுமையின் பல்வேறு பரிமாணங்கள் மற்றும் பொதுமக்கள் தொடர்பான விடயங்களை ஆராயவும் ஆவணப்படுத்தவும் பங்கேற்பாளர்கள் தமது அறிக்கைப்படுத்தும் திறன்களை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதனை புரிந்துகொள்வதற்காக ஒரு வாய்ப்பினை வழங்குகின்ற ஒரு நாள் ஆரம்ப நிகழ்வும் இந்நிகழ்ச்சித் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

துவக்க நிகழ்வின் பின்னர் தாம் அறிக்கைப்படுத்தவதற்கு விரும்புகின்ற வறுமை தொடர்பான பிரச்சினையொன்றை பற்றிய தலைப்பினை/மையக்கருத்தினைத் தெரிவு செய்து சமர்ப்பிப்பதற்குக் கேட்கப்படுவர். தமது ஒப்படைகளை மேற்கொண்டு உடன்பட்ட எண்ணிக்கையான கட்டுரைகளை சமர்ப்பிப்பதற்கு ஆய்வாளர்களுக்கு நான்கு மாதங்கள் வழங்கப்படும். இக்காலப்பகுதியில் ஆய்வாளர்கள் நிபுணர் குழாமினால் வழிகாட்டப்பட்டு பயிற்றப்படுவர். பெறப்படும் விளைவான ஆக்கங்கள் தமது உரிய ஊடக நிலையங்களுடாகவும் பின்னர் வறுமை ஆராய்ச்சி நிலையத்தின் இணையத்தளத்தினூடாகவும் பிரசுரிக்கப்படும் (http://www.cepa.lk/).

விண்ணப்பங்களுக்கான முடிவுத் திகதி : 26 ஆகஸ்ட் 2016

அண்மையில் இலங்கை மத்திய தர வருமானமீட்டும் நாடுகளில் ஒன்றாக பிரகடனப்படுத்தப்பட்டது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் ஒரு சதவீதமாக சமூகத் துறையில் பொதுச்செலவீனம் குறைந்துள்ளதுடன் இது சமமின்மையிலான வீச்சில் ஒரு அதிகரிப்பினை ஏற்படுத்தியுள்ளது. எனவே வறுமையானது இன்னமும் ஒரு பாரிய பிரச்சினையாக உள்ளதுடன் இது மக்களது ஆற்றல்கள், தனியார் மற்றும் சமூக சொத்துக்கள், ஓய்வு (அல்லது ஓய்வின்மை) மற்றும் சமூகப் பங்கேற்பு மற்றும் பாதுகாப்பினை கொண்டிருத்தல் போன்ற பல கூறுகளையும் கருத்தில் கொண்டதாக ஒரு பரந்த நோக்கில் புரிந்து கொள்ளப்பட வேண்டியுள்ளது.

இருந்தாலும் பெரும்பாலான ஊடகங்கள் வறுமை என்பதனை பணம் அற்ற நிலை எனும் பொருளாதார நோக்கிலிருந்து மாத்திரமே நோக்குகின்றன. வறுமையிலான ஒரு பரந்த புரிந்துணர்வு என்பதானது மக்கள் தமது முழு ஆற்றலை உணர்ந்துகொள்வதற்கு தேவையான ஜனநாயகம், சட்ட ஒழுங்குகள், கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் மற்றும் ஊடக சுதந்திரம் என்பவற்றிலான பரந்த புரிந்துணர்வினையும் உள்ளடக்கி நிற்கின்றது. வறுமை மீதான இம்மட்டுப்படுத்தப்பட்ட விளக்க நிலைக்கும் மேலதிகமாக பெரும்பாலான ஊடக தலைமையகங்கள் வறுமை சார்ந்த தலைப்புக்களில் கள நிலை மற்றும் ஆராய்ச்சி சார் ஊடகவியலாளர் ஒப்படைகளுக்கு மிகவும் குறைந்த பண ஒதுக்கீட்டினையே தமது வரவு செலவுத் திட்டத்தில் வழங்குகின்றன.

**ஊடக கூட்டிணைவு நிகழ்ச்சித் திட்டம்**

வறுமை மற்றும் அபிவிருத்தி பற்றிய ஊடக கூட்டிணைவு நிகழ்ச்சித்திட்டத்துடன் இவ்விடைவெளியினை நிரப்புவதற்கு வறுமை ஆராய்ச்சி நிலையம் (CEPA) எண்ணியுள்ளது.

போட்டியிட்டு தெரிவுசெய்யப்பட்ட பதினைந்து (15) ஊடகவியலாளர்களுக்கு வறுமையினது பல்வேறு பரிமாணங்கள் மீதான சிறந்த புரிந்துணர்வினை வழங்கி மற்றும் வெளிப்படுத்தப்படாத அல்லது மிகவும் குறைவாக அறிக்கைப்படுத்தப்படுகின்ற வறுமை தொடர்பான விடயங்களில் வழிகாட்டல்களை வழங்குவதனூடாக அவர்களது திறன்களை விருத்தி செய்வதற்காக இந்நிகழ்ச்சித்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

தெரிவுசெய்யப்பட்ட பங்கேற்பாளர்கள் சிரேஷ்ட ஊடகவியலாளர்கள் மற்றும் அபிவிருத்தி ஆய்வாளர்களுடன் நேருக்கு நேர் சந்திக்கும் வாய்ப்பினைப் பெறுவதுடன் அவர்களது களப் பயணச் செலவினங்களுக்காக பண உதவியையும் பெற்றுக் கொள்வர். அவர்கள் தமக்கு விருப்பமான ஒரு விடயத்தினை ஆழ, அகலமாக ஆராய்வதற்குரிய வாய்ப்பினைப் பெறுகின்றனர் என்பதுடன் இவ்வாய்ப்பு தாம் ஆராயும் விடயம் தமது ஊடகத்தினூடாக வெளிப்படுத்தப்பட வேண்டும் எனும் புரிந்துணர்வின் அடிப்படையிலானதாகும்.

**விண்ணப்பிப்பதற்கான வழிகாட்டல் குறிப்புகள்**

விண்ணப்பங்கள் இலங்கையில் வறுமை தொடர்பான பல்வேறு விடயங்களையும் ஆராய்கின்ற நோக்குடன் ஒரு ஊடக கூட்டிணைவு நிகழ்ச்சித் திட்டத்திற்காக அச்சு, வானலை (தொலைக்காட்சி, வானொலி) மற்றும் இணையத்தள ஊடக நிறுவனங்களில் பணிபுரிகின்ற ஊடகவியலாளர்களிடமிருந்து (தனிப்பட்ட ரீதியில் இயங்குவோர் உட்பட) கோரப்படுகின்றன.

- விண்ணப்பதாரிகள் ஒரு தேசிய அல்லது உள்நாட்டு ஊடகத்தினில் ( செய்திப் பத்திரிகை, சஞ்சிகை, வானொலி, தொலைக்காட்சி, செய்தி இணையத் தளம்) செய்தி நிருபர்களாகவோ, தனிச்சிறப்பு ஆக்கங்கள் எழுதுபவர்களாகவோ, ஒலி/ஒளி அலைபரப்புத் தயாரிப்பாளர்களாகவோ, புகைப்பட ஊடகவியலாளர்களாகவோ அல்லது 'ஒன்லைன்' உள்ளடக்கப் படைப்பாளர்களாகவோ இருக்கலாம்.

- வெளிநாட்டு நிருபர்கள், ப்ளொக் எழுதுபவர்கள் மற்றும் செய்திப் பத்திரிகைகளுக்கு கருத்து எழுதுபவர்கள் தகைமை பெற மாட்டார்கள்.

- விண்ணப்பாதாரிகள் முழு நேரமாகவோ, பகுதி நேரமாகவோ அல்லது தனிப்பட்ட ரீதியில் இயங்குபவர்களாகவோ குறைந்தது ஐந்து (5) வருட ஊடகச் சேவை அனுபவத்தினை கொண்டிருக்க வேண்டும். அதாவது 2011ஆம் ஆண்டு ஜூன் மாதத்திலிருந்தேனும் ஒரு ஊடக நிலையத்துடன் பணி சார் தொடர்பினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

- தனிப்பட்ட ரீதியில் இயங்குபவர்கள் தாம் தொடர்ந்தும் பங்களிப்புச் செய்கின்ற ஒரு ஊடக அமைப்பினைக் கொண்டிருக்க வேண்டும் என்பதுடன் (விண்ணப்பிக்கின்ற முழு நேர ஊடகவியலாளர்களுக்கு உரியது போன்று) பதிப்பாசிரியரிடமிருந்து/தொகுப்பாளரிடமிரந்து ஒரு ஆதரவுக் கடிதத்தினையும் பெற்றுக்கொள்ள வேண்டும் (கீழே பார்க்க).

- விண்ணப்பதாரிகள் இலங்கைப் பிரசைகளாக இருத்தல் வேண்டும்.

- விண்ணப்பிப்பதற்கு கண்டிப்பான வயது எல்லை குறிப்பிடப்படாவிடினும் குறைந்தது ஐந்து வருட ஊடகப் பணி அனுபவத்தினைக் கொண்டுள்ள தமது துறையின் மத்திய காலத்தில் உள்ள ஊடகவியலாளர்கள் மற்றும் ஒலி/ஒளிபரப்பாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

- விண்ணப்பங்கள் ஆங்கிலம், சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் சமர்ப்பிக்கப்படலாம்.

**விண்ணப்பத்தில் உள்ளடக்கப்பட வேண்டியவை**

விண்ணப்பத்தில் பின்வருவன உள்ளடக்கப்பட வேண்டும்.

- இரண்டு உறவு முறை சாரா சாட்சிகளது பெயர்கள் மற்றும் தொடர்பு கொள்வதற்கான தகவல்களுடன் தகைமைத் திரட்டு (CV)

- இவ்வூடக கூட்டிணைவு நிகழ்ச்சித் திட்டத்தில் விண்ணப்பதாரி பங்கேற்க விரும்பும் காரணத்தை விளக்குவதாக முகப்பு அல்லது அறிமுக கடிதமொன்று (250 சொற்களுக்கு மேற்படாததாக).

- தற்போது பொதுமக்கள் சார் விடயமொன்றில் ஆய்வுசெய்யப்பட்ட குறைந்தது மூன்று அச்சு/ இணையத்தள கட்டுரைகள் அல்லது மூன்று வானலை ஒலி/ஒளிபரப்புகள். வானலை/ தொலைக்காடசி சார் விடயமெனின் இந்நிகழ்ச்சி உள்ளடக்கப்பட்ட இருவெட்டொன்றினை அல்லது இணையத்தளத்தில் அந்நிகழ்ச்சி காணப்படுகின்ற குறித்த இடத்திற்கான இணையத்தள தொடர்பினைத் தருக.

- சகல விண்ணப்பதாரர்களும் தாம் இணைந்துள்ள ஊடக நிறுவனத்தினது பதிப்பாசிரியர் அல்லது தொகுப்பாளரிடமிருந்து இவ்வாய்வு நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து பெறப்படும் விண்ணப்பதாரரினது ஆய்வின் பெறுபேறுகளை பிரசுரிப்பதற்கு உடன்படுவதாக ஒரு கடிதத்தினை வழங்குவதற்கு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். இக்கடிதம் ஊடக நிறுவனத்தினது முகவரி அச்சிடப்பட்ட அஞ்சல் தாளில் கையொப்பமிடப்பட்டதாக அனுப்பப்பட வேண்டும் (கடிதத்தினது ஊடு கதிர்ப்படமும் Scan ஏற்றுக்கொள்ளப்படும்).

- பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

- விண்ணப்பங்களுக்கான முடிவுத் திகதி 26 ஆகஸ்ட் 2016, இலங்கை நேரப்படி ப.ப. 6.00. அனைத்து விண்ணப்பங்களும் இம்முடிவுத் திகதிக்கு முன்னர் வறுமை ஆராய்ச்சி நிலையத்தினை அடைய வேண்டும்.

விண்ணப்பங்கள் மின்னஞ்சல் மூலமாகவோ தபால் மூலமாகவோ அனுப்பப்படலாம்.

தபால் முகவரி: வறுமை ஆராய்ச்சி நிலையம் (CEPA), 29, ஆர்.ஜி. சேனாநாயக்க வீதி (முன்னைய கிறகரி வீதி), கொழும்பு 7

வறுமை மற்றும் அபிவிருத்தி ஊடக கூட்டிணைவு நிகழ்ச்சித் திட்டத்திற்கென அர்ப்பணிக்கப்பட்ட மின்னஞ்சல் முகவரி: mediafellowship@cepa.lk

**தெரிவு செய்யும் செயன்முறை**

நிகழ்ச்சித் திட்டத்தில் ஒரு சிறந்த பால் சமநிலை பேணப்படும் விதத்திலும் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பணியாற்றும் ஊடகவியலாளர்களை பிரதிநிதித்துவப்படுத்தவதாகவும் 15 பங்கேற்பாளர்களும் தெரிவுசெய்யப்படுவர்.

அச்சு, வானலை மற்றும் இணையத்தள ஊடகங்களில் சிறந்த அனுபவம் கொண்ட ஐந்து ஊடக நிபுணர்களைக் கொண்ட குழாமொன்றினால் பங்கேற்பாளர்கள் தெரிவுசெய்யப்படுவர் எனபதுடன் இவர்களால் இந்நிகழ்ச்சித்திட்டம் முழுதும் வழிகாட்டப்பட்டு பயிற்றப்படுவர்.

நிபுணர் குழாம் அங்கத்தவர்கள்

1. நாலக குணவர்த்தன
2. குஸல் பேரேரா
3. ஹனா இப்றாஹிம்
4. ஷமின்ந்தர குலமன்னகே
5. அருண் ஆரோக்கியநாதன்

**ஊடக கூட்டிணைவு நிகழ்ச்சித்திட்ட செயற்பாடுகள்**

- வறுமையின் பல்வேறு பரிமாணங்கள் மற்றும் பொதுமக்கள் தொடர்பான விடயங்களை ஆராயவும் ஆவணப்படுத்தவும் பங்கேற்பாளர்கள் தமது அறிக்கைப்படுத்தும் திறன்களை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதனை புரிந்துகொள்வதற்கு ஒரு வாய்ப்பினை வழங்குகின்ற ஒரு நாள் ஆரம்ப நிகழ்வுடன் பயிற்சி ஆரம்பிக்கப்படும்.

- துவக்க நிகழ்வின் பின்னர் தாம் அறிக்கைப்படுத்தவதற்கு விரும்புகின்ற வறுமை தொடர்பான பிரச்சினையொன்றை பற்றிய தலைப்பினை/மையக்கருத்தினைத் தெரிவு செய்து பின்னர் தமது தலைப்பு/மையக்கருத்தினை களப் பயணங்கள், நேர்காணல்கள் என்பவற்றை எவ்வாறு ஆராயப் போகின்றனர் என்பதனை முன்வைக்கக் கேட்கப்படுவர்.

- ஆய்வாளர்கள் வறுமை ஆராய்ச்சி நிலையத்தினது ஆய்வுக் கற்கைகளையோ அல்லது கண்டுபிடிப்புக்களையோ மற்றும் அதன் ஆய்வாளர்களையோ பின்பற்ற வேண்டும் என்ற எந்த ஒரு எதிர்பார்ப்போ அல்லது தேவையோ இல்லை. எனினும் ஆய்வாளர்களது முறைசாரா தகவல் சேகரிப்புத் தேவைகளுக்காக வறுமை ஆராய்ச்சி நிலையத்தினது ஆய்வாளர்களும் வாசிகசாலையும் எப்போதும் பயன்படுத்தப்படலாம்.

- தமது ஒப்படைகளை மேற்கொண்டு உடன்பட்ட எண்ணிக்கையான கட்டுரைகளை சமர்ப்பிப்பதற்கு ஆய்வாளர்களுக்கு நான்கு மாதங்கள் வழங்கப்படும். இக்காலப்பகுதியில் ஆய்வாளர்கள் நிபுணர் குழாமினால் வழிகாட்டப்பட்டு பயிற்றப்படுவர்.

பங்கேற்பாளர்களது தயாரிப்பு (கட்டுரைகள்/நிகழ்ச்சிகள்) 2016 டிசெம்பர மற்றும் 2017 ஜனவரி மாதங்களிடையில் தமது உரிய ஊடக நிலையங்களினூடாக இடம்பெறச் செய்யப்பட வேண்டும்.

அவர்களது முதற் பிரசுரத்தின் பின்னர் இவை வறுமை ஆராய்ச்சி நிலையத்தினது இணையத் தளத்துடன் இணைத்துக் கொள்ளப்படும் http://www.cepa.lk (http://www.cepa.lk/events/section/media-fellowship-program.html ].

இவ்வூடக கூட்டிணைவு நிகழ்ச்சித்திட்டத்திற்கு விண்ணப்பபிப்பதனூடாக அனைத்து ஊடகவியலாளர்கள் மற்றும் அவர்களது ஊடக அமைப்புக்களும் இதனூடாக விளைவாகும் கட்டுரைகள்/நிகழ்ச்சிகளது பதிப்புரிமையினை வறுமை ஆராய்ச்சி நிலையத்துடன் பகிர்ந்துகொள்வதற்கு உடன்படுகின்றனர். எழுத்தாளர்கள்/தயாரிப்பாளர்களது அறிவுத் திறன் சார் உரிமை முழுதும் ஏற்றுக்கொள்ளப்படும்.

இந்நிகழ்ச்சித் திட்டத்தின் இறுதியிலான பதிப்புரிமை திட்டவமைப்புச் சட்டகம் Creative Commons Attribution-ShareAlike 3.0 IGO (CC-BY-SA 3.0 IGO) license http://creativecommons.org/licenses/by-sa/3.0/igo/ ஆக இருக்கும்.

இத்திட்டமானது யுனெசுகொ நிறுவனத்தால் உதவியளிக்கப்ப்ட்டது